**இலங்கை திறந்த பல்கலைக்கழகம் The Open University of Srilanka**
**மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் பீடம் Faculty of Humanities and Social Sciences**
**தமிழ் மற்றும் தமிழ்மொழி கற்பித்தலில் சிறப்புக் கலைமாணி - 2022/2023**
**Bachelor of Arts (Honors) in Tamil and Tamil Language Teaching - 2022/2023**
**இறுதிப்பரீட்சை (Final Exam)**
**மட்டம் (Level) - 04 பருவம் (Semester) - 01**
**LEU4316- சிங்கள இலக்கிய வரலாறு (Introduction to Sinhala Literature )**
**காலம் : மூன்று (03) மணித்தியாலங்கள்**
**Three (03) Hours**

| | |
|---|---|
| திகதி:- 23.11.2024 | நேரம்: பி.ப. 01.30 - பி.ப 04.30 |
| Date :- 23.11.2024 | Time : 01.30 p.m – 04.30 p.m |

**அறிவுறுத்தல்கள்/Instructions**

- தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை நன்கு வாசியுங்கள்
- உங்களுக்குரிய சுட்டெண்ணைத் தெளிவாகக் குறிப்பிடுக
- விடைக்குரிய சரியான வினா இலக்கங்களைக் குறிப்பிடுக
- தரப்பட்டுள்ள ஆறு(06) வினாக்களுள் நான்கு(04) வினாக்களைத் தெரிவு செய்து விடையளிக்குக
- தெளிவற்ற எழுத்துகள், எழுத்துப்பிழைகள், இலக்கணப்பிழைகள் ஆகியவற்றுக்குப் புள்ளிகள் குறைக்கப்படும் என்பதனைக் கவனத்திற் கொள்க

- **Read the given instruction carefully**
- **Please write the correct index Number**
- **Answer only 4 Questions**
- **Mark will be deducted for unclear writing, spelling and grammatical errors**

முக்கிய குறிப்பு (Note) :
உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளின் முன்பக்கத்தின் முடிவுப்பகுதியில் உங்களுக்குரிய சரியான பதிவிலக்கத்தினையும் குறிப்பிடுக.
**At the bottom of the front page in your answer sheet, mention your correct Registration Number.**
பதிவிலக்கத்தினையோ, சுட்டெண்ணையோ பிழையாக எழுதினால் உங்களால் புள்ளிகளைப் பெற முடியாது என்பதைக் கவனத்திற் கொள்க.

## பகுதி – I

**இப்பகுதியில் உள்ள அனைத்து வினாக்களுக்கும் சுருக்கமாக விடையளிக்கவும். வினாக்களை முழுமையாக வாசித்து, பூரணமாக விளங்கிக் கொண்டதன் பின்னர் விடைகளை எழுத ஆரம்பிக்கவும்.**

**1) (அ) i.** ‘சீத்தாவக்க’ என்ற சொல்லின் பொருளை வரையறுக்குக.
**(04 புள்ளிகள்)**

**ii.** சீத்தாவக்க யுகத்தில் அதிகமான இலக்கியங்கள் தோற்றம் பெறாமைக்கான காரணங்கள் **ஆறினைக் (06)** குறிப்பிடுக.
**(06 புள்ளிகள்)**

**(ஆ) i.** இலங்கையின் மிகப் பழமையான சிங்கள இராச்சியம் எது?
**(02 புள்ளிகள்)**

**ii.** கி.பி. 6ஆம் நூற்றாண்டில் முதலாவது அக்போ மன்னன் காலத்தில் வாழ்ந்த 12 கவிஞர்களுள் **நால்வரின் (04)** பெயர்களைத் தருக.
**(08 புள்ளிகள்)**

**(இ) i.** குருநாகல் யுகத்தில் பிரசித்தி பெற்ற நூலாகக் கருதப்படுவது எது?
**(02 புள்ளிகள்)**

**ii.** குருநாகல் யுகத்தில் வாழ்ந்த கீர்த்தி மிக்க பண்டிதர்கள் **நால்வரின் (04)** பெயர்களைத் தருக.

**(04 புள்ளிகள்)**

**iii.** கம்பளை யுகத்தில் தோன்றிய இலக்கியங்கள் **நான்கினைக் (04)** குறிப்பிடுக.

**(04 புள்ளிகள்)**

**(ஈ)** 'சிங்கள இலக்கிய வரலாற்றில் பொலன்னறுவைக் காலம்' சுருக்கமாக விளக்குக.

**(10 புள்ளிகள்)**

**(மொத்தப் புள்ளிகள் - 40)**

## பகுதி – II

**இப்பகுதியில் உள்ள ஐந்து (05) வினாக்களில் எவையேனும் மூன்று (03) வினாக்களை மட்டும் தெரிவு செய்து, வினா இலக்கங்களைச் சரியாகக் குறிப்பிட்டு, விடைகளை எழுதவும்.**

**2)** **அ.** கண்டி இராசதானியை ஆண்ட மன்னர்கள் **ஐவரின் (05)** பெயர்களைக் குறிப்பிடுக.

**(05 புள்ளிகள்)**

**ஆ.** 'சிங்கள இலக்கிய வரலாற்றினைப் பொறுத்தவரையில் நவீன இலக்கிய வரலாற்றினுள் காலடி எடுத்து வைக்கும் யுகமாகக் கருதப்படுவது கண்டி யுகமாகும்.' இக்கூற்றின் பொருத்தப்பாட்டினை ஆராய்க.

**(15 புள்ளிகள்)**

**3)** **அ.** மாத்தறை யுக இலக்கியங்கள், அதற்கு முற்பட்ட யுக இலக்கியங்களில் இருந்து சிறப்புப் பெறுவதற்கான காரணத்தைத் தருக.

**(04 புள்ளிகள்)**

**ஆ.** 'தம்பதெனிய யுகத்தில் பன்முகத்தன்மை கொண்ட இலக்கியங்கள் படைக்கப்பட்டன.' இக்கூற்றினைப் பரிசீலிக்குக.

**(16 புள்ளிகள்)**

**4)** '19ஆம் நூற்றாண்டில் இருந்து இன்றுவரை உள்ள சிங்களக் கவிதைகள்' என்ற தலைப்பில் கட்டுரை **ஒன்றினை** (01) வரைக.

**(20 புள்ளிகள்)**

**5)** நவீன சிங்கள இலக்கியப் படைப்பாக்கத்தில் 'எதிரிவீர சரச்சந்திர' பெறும் இடத்தினை மதிப்பிடுக.

**(20 புள்ளிகள்)**

**6)** கீழே தரப்பட்டுள்ள விடயங்களுள் **இரண்டினைத்** (02) தெரிவு செய்து சிறுகுறிப்பு எழுதுக.

**அ.** சத்தர்ம ரத்னாவலிய
**ஆ.** கோட்டையுக இலக்கியங்கள்
**இ.** விமலரத்ன குமாரகம
**ஈ.** மார்ட்டின் விக்ரமசிங்ஹ

**(20 புள்ளிகள்)**

**(மொத்தப்புள்ளிகள் - 60)**

- முழுப்பதிப்புரிமையுடையது -